# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 32

20.08 2023






சர்வதேசக் கவனத்தை ஈர்க்கும் சூரத் வைர வர்த்தக மையம் 02



இந்திய - சீனா பொருளாதார தரவரிசை ..... 09



இளைஞர்கள் தனித் திறமைகளை அடையாளம்.. 12


# அதிக இலாபம் தரும்வகையில் திராட்சை செய்வது எவ்வாறு?


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# சர்வதேசக் கவனத்தை ஈர்க்கும் சூரத் வைர வர்த்தக மையம்

- அ.ராஜன் -

வைர வர்த்தகத்தில் உலகின் மைய மாக இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் சூரத் நகரம் உருவெடுக்கவுள்ளது. இந்நக ரம் சமீப காலம் வரை சர்வதேச அளவில் வைர மெருகூட்டலுக்கான தலைநகரமாக மட்டுமே அறியப்பட்டு வந்தது. இந்நிலை யில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் அதி நவீன சூரத் வைர மையம் (எஸ்ரிபி) விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ள நிலையில், சூரத் இனி உலக வைர வர்த்தகத்தின் கூரை யாக மாறும். உலக நாடுகளில் வெட்டியெ டுக்கப்படும் 95 சதவீத வைரங்கள் சூரத் நகரில்தான் மெருகூட்டப்படுகின்றன. இதனால் அது வணிகர்களால் டயமண்ட் சிட்டி என்று அழைக்கப்படுகிறது.

இலங்கையும் இரத்தினக்கல், வைரம் போன்றவற்றின் வியாபாரத்தில் முக்கிய மான இடத்தில் இருப்பதால் இலங்கை யைப் பொறுத்தவரையிலும் கூட இது முக் கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கும்.

பல தசாப்தங்களுக்கு முன்பு சூரத் நக ரில் வணிகத்தைத் தொடங்கிய ஏழை கைவினைக் கலைஞர்கள் பலர் இன்று கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனர். தற் போது இந்நகரில் அமைந்துள்ள 6 ஆயிரம் சிறு மற்றும் பெரிய வைரத் தொழில்கள் மூலம் 8 இலட்சத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்நிலை யில், வைரத்தை வெட்டுதல், பட்டைதீட்டு தல், அதை விற்பனை செய்தல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில் இந்தப் புதிய கட்டிடம் கட்டப்படுள்ளது.

### என்ன சிறப்பம்சம்?

அமெரிக்காவில் உள்ள இராணுவத் தலைமையகமான பென்டகன்தான், அதிக பரப்பில் இயங்கி வரும் உலகின் விஸ்தாரமான அலுவலகக் கட்டடங்களை உள்ளடக்கிய தளமாக கடந்த 80 ஆண்டு களாகக் கோலோச்சி வருகிறது. பென்டகன் அமைந்துள்ள மொத்த தளப் பரப்பு 66.73 இலட்சம் சதுர அடியாகும். ஆனால், சூரத்தில் அமைக்கப்பட்டுள்ள எஸ்டிபி வைர சந்தை பென்டகன் சாதனையை முறியடிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. எஸ்ரிபி 35.5 ஏக்கர் வளாகத்தில் 67.28 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாக்கப்பட்டுள் ளது.

எஸ்ரிபி வளாகத்தில் 9 கோபுரங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கோபுரத்தி லும் (ரவர்) 15 தளங்கள் 81 மீட்டர் உயரத் தில் கட்டப்பட்டுள்ளன. இதில் 4,700 வைர வணிக அலுவலகங்கள் செயல்பட முடி யும். 65,000 பேர் பணியாற்ற முடியும். ஒவ்வொரு தளங்களுக்கும் சென்று வருவ தற்காக 131 மின்தூக்கிகள் அமைக்கப்பட் டுள்ளன.

200 காவலர்கள் 4,000 ஸ்மார்ட் சிசிடிவி கமராக்கள் மூலம் வளாகத்தின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப் பர். இரண்டு தளங்களில் 4,500 கார்கள் மற்றும் 10,000 மோட்டார் பைக்குகளை நிறுத்தும் வகையில் இடவசதி செய்யப் பட்டுள்ளது. ஒரு ரவரிலிருந்து மற்றொரு ரவருக்கு செல்ல விரும்பும்போது தரைதளத் துக்குச் செல்லாமல் 6 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் செல்லும் வகை யில் எஸ்டிபி வளாகம் வடிவமைக்கப்பட் டுள்ளது. இது இதன் மற்றொரு சிறப்பம்சமா கும்.

இந்தக் கட்டிடத்தை இந்தியக் கட்டிடக் கலை நிறுவனம் மார்போ ஜெனிஸ் வடி



*200 காவலர்கள் 4,000 ஸ்மார்ட் சிசிடிவி கமராக்கள் மூலம் வளாகத்தின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பர். இரண்டு தளங்களில் 4,500 கார்கள் மற்றும் 10,000 மோட்டார் பைக்குகளை நிறுத்தும் வகையில் இடவசதி செய்யப்பட்டுள்ளது. ஒரு ரவரிலிருந்து மற்றொரு ரவருக்குச் செல்ல விரும்பும்போது தரைத் தளத்துக்குச் செல்லாமல் 6 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் செல்லும் வகையில் எஸ்டிபி வளாகம் வடிவமைக்கப்பட்டுள்ளது*

வமைத்துள்ளது. இந்தக் கட்டிடத்தைக் கட்ட 4 ஆண்டுகள் ஆகியுள்ளன.

### மும்பையின் முக்கியத்துவம் குறையுமா?

இந்தியாவில் வைரங்களை வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல் போன்ற வேலைகள் சூரத்தில் நடக்கின்றன. ஆனால், அவற்றை வணிகம் செய்வதற்கு தற்போதைய நிலைமையில் வியாபாரிகள் மும்பை செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அந்தக் குறையினைத் தீர்ப்பதற்கும், செலவு, பயண நேர விரயத்தைத் தவிர்ப்பதற்கும் வைரத்தின் அனைத்து வர்த்தக நடவடிக்கைகளும் ஒரே இடத்தில் நடைபெறும் வகையில் மிகப்பெரிய முதலீட்டில் எஸ்டிபி உருவாக்கப்பட்டுள்ளது.

எஸ்டிபி மூலம் 1.5 இலட்சம் பேருக்கு வைரம் வணிகம் சார்ந்த தொழில்களில் நேரடியாக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. இதற்கான திட்டம் 2017 காலகட்டத்தில் உருவானதாகவும், குழு உறுப்பினர்கள் இலாப நோக்கமற்ற இந்த எஸ்டிபி அமைப்பை உருவாக்க ரூ.3,200 கோடி வரை நிதி திரட்டியதாகவும் தெரிவிக்கின்றனர்.

கஜோத் அருகே டயமண்ட் ரிசர்ச் அண்ட் மெர்கன்டைல் (டிரீம்) சிட்டியில் அரசிடம் இருந்து நிலத்தைக் கையகப்படுத்தி எஸ்ரிபி சந்தையை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டாலும் கொரோனாக் காரணமாகத் தாமத நிலை ஏற்பட்டது. இருப்பினும் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 2022இல் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டது. இறுதிக்கட்டப் பணிகள் நிறைவடைந்து இவ்வருடம் நவம்பரில் எஸ்டிபி செயல்பாட்டுக்கு வரும் என்று வைர வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

### வைரச் சந்தையில் இந்தியா

உலகளவில் வைர வர்த்தகச் சந்தையின் மதிப்பு 2022-ல் 95 பில்லியன் டொலராக இருந்தது. இது, இந்திய மதிப்பில் சுமார் ரூ.7.8 இலட்சம் கோடி. வைரத்துக்கான தேவை அதிகரித்து வருவதையடுத்து உலக வைரச் சந்தை 5.2 சதவீத வளர்ச்சியை எட்டி 2030இல் 140 பில்லியன் டொலராக அதிகரிக்கும் (இந்திய ரூபாவில் 11.50 இலட்சம் கோடி) என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் வைரச் சந்தையின் மதிப்பு 2022 நிலவரப்படி 19 பில்லியன் டொலராக (ரூ.1.56 லட்சம் கோடி) உள்ளது. இது, 26 பில்லியன் டொலராக 2030இல் (ரூ. 2.13 இலட்சம் கோடி) அதிரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் வைரங்கள், இரத்தினங்கள், ஆபரணங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தை ஊக்குவிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டே எஸ்டிபி சந்தை உருவாக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த வர்த்தக மையம் இந்தியாவின் வைரம், இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் சார்ந்த தொழிலை உலகமே கவனிக்கும் வகையில் அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்லும் என்று இந்திய வர்த்தகத்துறையினர் எதிர்பார்க்கின்றார்கள்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## விவசாயத்துறையை நவீன மயப்படுத்தல்?

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் மூலமாக நாட்டின் விவசாயத்துறையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருக்கின்றார்.

விவசாயம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயலணி ஒன்றை உருவாக்கவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பெருந்தோட்ட, நீர்ப்பாசன, மகாவலி அமைச்சுக்களை இணைத்து தனியார் துறையின் பங்கெடுப்புடன் இந்த செயலணியை நிறுவுவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் அவரது திட்டங்கள் எப்போதும் வினைத்திறன் உள்ளவையாகவும், வரவேற்கத்தக்கவையாகவும் இருப்பது உண்மைதான். ஆனால், அவற்றைச் செயற்படுத்துவது எப்போதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதாக இருப்பதில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத்துறை பாரம் பரியமானது மட்டுமல்ல பிரதானமானதுமாகும். ஆனால், அந்தத் துறையிலிருந்து பலர் வேறு துறைகளை நாடிச் செல்வதற்குப் பல்வேறு காரணிகள் அடிப்படையாக உள்ளன. அதன்மூலமான வருமானம் குறைவடைவது, எதிர்பாராத இயற்கை அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய இழப்புக்கள் அவர்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன.

இவற்றைவிட அரசாங்கத்தின் தறவான பொருளாதாரக் கொள்கை, உரிய நேரத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத்தவறுவது என்பனவும் விவசாயத்துறையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

இந்தத் தவறுகளை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்தும் தாராளமாகச் செய்துவருகின்றது. அண்மையில் ஏற்பட்ட கடும் வரட்சியின் பாதிப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான திட்டம் எதுவும் அதிகாரிகளிடம் இருக்கவில்லை. நீர்த்தேக்கங்களிலிருந்து நீரைத் திறந்துவிட வேண்டும் என்று கோரி விவசாயிகள் போராட்டத்தை ஆரம்பிக்கும் வரையில் இது பாரிய ஒரு நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை அதிகாரிகள் கணித்திருக்கவில்லை.

சமனலவெவாவிலிருந்து நீர் பின்னர் திறந்துவிடப்பட்டாலும் கூட, அது காலந்தாழ்த்தப்பட்ட ஒரு செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது. காலந்தாழ்த்தப்பட்டதால் பெருமளவு இழப்புக்கள் ஏற்பட்டதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

பொருளாதார நெருக்கடி காரணமாகவும், டொலர் கையிருப்பு இல்லாமையாலும் இறக்குமதிக்குத் தடை செய்யப்பட்ட பல பொருட்கள் மீதான தடை இப்போது தளர்த்தப்பட்டிருக்கின்றது. இதில் விவசாய உற்பத்திகள், பழங்கள் போன்றனவும் அடங்கும். உள்ளூர் உற்பத்திகளைப் பாதிக்கக்கூடிய இது போன்ற அரசின் கொள்கைகள் மறுபரிசீலனை செய்யப்படவேண்டியவை.

இவற்றையெல்லாம் செய்துகொண்டு விவசாயத்தை நவீன மயப்படுத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்லிக்கொள்வது அர்த்தமுள்ள ஒன்றாக இருக்குமா?

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## தன்னிறைவுக்கு உழைக்கும் பத்திரிகை

ஆயிரம் பத்திரிகைகள் தாய் நாட்டில் வந்தாலும் மனிதன் சுயமாகத் தன்னிறைவோடு நிமிர்ந்து நிற்கத் தமிழர் பொருண்மியம் மட்டுமே உண்டு.

இலாபமோ நட்டமோ
இந்த பத்திரிகை
நம் மக்களுக்கானது
என்ற மன நிறைவு உண்டு.

இப்படித் தெற்கிலும் வருவதாக நான் அறியவில்லை.

அவர்கள் புத்தரை விதைக்கட்டும்
நாம் புதிரை அகற்றி
தமிழர் மேம்பாட்டை
விதைப்போம்.

ஒரு தமிழர் பொருண்மியம் செய்ய எடுக்கும் காலத்தில் 10 செய்தி பத்திரிகைகளை இலகுவாகச் செய்யலாம்.

மக்கள் செய்தி சொல்லும் காலம் இது.
எமக்கு இன்று தேவை
எமது தரத்தை மேம்படுத்துவதே.
பொருண்மியத்துக்கு எமது வாழ்த்துக்கள்.

**சிவகுமார், ஜேர்மனி**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை Green media House (Pvt) Ltd என்ற பெயரில், HNB Bank - Jaffna Metro branch - 016010023281 கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ---------------------------------------------
**முகவரி** - ---------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ------------------------------
**சந்தாக் காலம்** - ---------------------------------------
**செலுத்திய தொகை** - ---------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,57,600 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,71,900 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




கேள்வி – புத்திஜீவிகளின் வெளியேற்றம் நாட்டில் எவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்தப்போகின்றது?

**எஸ்.கணநாதன்,**
**யாழ்ப்பாணம்**

பதில் - உண்மையில் புத்திஜீவிகள் பாதையைத் திறந்துவிட்டதே அரசாங்கம் தான். அந்நியச் செலாவணி வருமானத்தைப் பெறுவதை மட்டும் நோக்கமாகக்கொண்டு அரச சேவையில் இருப்பவர்களுக்கு ஐந்து வருடங்களுக்குச் சம்பளமற்ற லீவைக் கொடுத்தமைதான் இதற்கான முதலாவது காரணம். அரசாங்கத்தின் மீதும், நாட்டின் பொருளாதாரத்தின் மீதும் நம்பிக்கையிழந்த நிலை அவர்களை வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு உந்தித் தள்ளியது. இதற்கு மேலாக வருமான வரி திடீரென அதிகரிக்கப்பட்டமை என்பன பொருளாதார ரீதியாக அனைத்துக் குடும்பங்களையும் பாதித்தது. இதனால், இனிமேலும் இங்கிருப் பது பயனுள்ளதாக இருக்குமா? என்ற கேள்வியுடன்தான் அவர்கள் வெளி நாடுகளுக்குப் புறப்பட்டார்கள்.

இந்த வெளியேற்றம் ஏற்கனவே நிறையப் பிரச்சினைகளை உருவாக்கத் தொடங்கிவிட்டது. தகுதியான மருத்துவர்கள் இல்லாமையால் மருத்துவமனைகள் பலவும் நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தொடங்கிவிட்டன. இதனால் நோயாளர்கள்தான் பாதிக்கப்படுகின்றார்கள். ஏற்கனவே ஒரிரு மரணங்களும் இடம்பெற்றிருக்கின்றது. இதனைவிடப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் வெளியேறத் தொடங்கியுள்ளார்கள். இறுதியாக வந்த தகவலின்படி ஐயாயிரம் ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். மேலும் சிலர் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்துவருகின்றார்கள்.

பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை ஏற்கனவே இருக்கும் ஒரு பிரச்சினை. இந்த நிலையில் மேலும் ஆசிரியர்கள் வெளியேறுவது மாணவர்களின் பாடசாலைக் கல்வியைப் பெரிதாகப் பாதிக்கப்போகின்றது. புதிதாக யாரையும் அரசாங்க சேவையில் இணைத்துக் கொள்வதில்லை என்ற முடிவையும் அரசாங்கம் எடுத்திருக்கின்றது. திறமையும் தகுதியும் உள்ள ஆசிரியர்கள் இவ்வாறு பெருமளவுக்கு வெளியேறினால், கல்வித் தரம்பெரிதும்பாதிக்கப்படும். அதேவேளையில், சிறந்த ஆங்கில அறிவுள்ள ஆசிரியர்களுக்குத்தான் நாட்டில் பெருமளவு தட்டுப்பாடு உள்ளது. அந்தத் தகுதியுள்ள ஆசிரியர்கள் தான் அதிகளவுக்கு வெளிநாடுகளுக்கும் செல்கின்றார்கள்.

இந்த நிலையைப் புரிந்துகொண்டு அரச அதிகாரிகளுக்கு ஐந்து வருட விடுமுறை என்ற அறிவித்தலை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யலாம். குறிப்பாக அதற்குள் சில நிபந்தனைகளை உள்ளடக்கலாம். புத்திஜீவிகள் அதிகளவுக்கு வெளியேறுவதால் உருவாகும் பிரச்சினைகளை நாடு ஏற்கனவே அனுபவிக்கத் தொடங்கிவிட்டது. பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குக் கையாளக்கூடிய உபாயங்கள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாமல் இருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம். இல்லையெனில் பாதகமான விளைவுகள் தவிர்க்க முடியாதவையாகவே இருக்கும்.

## கேளுங்கள் தருகின்றோம்

**தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -**
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 250/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 350/= |
| தக்காளி | - 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 280/= |
| கரட் | - 400/= |
| பூசணி | - 120/= |
| புடோல் | - 80/= |
| வாழைக்காய் | - 180/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 160/= |
| பாவற்காய் | - 450/= |
| வெண்டிக்காய் | - 80/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 300/= |
| லீக்ஸ் | - 200/= |
| பீற்றூட் | - 120/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 200/= |
| போஞ்சி | - 420/= |
| கத்தரி - தம்புள்ள | - 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 199/= |
| கனடா டொலர் | 230/= |
| சீன யுவான் | 42/= |
| யுரோ | 340/= |
| ஜப்பான் யென் | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 230/= |
| ஸ்ரேர்லிங் பவுண் | 399/= |
| சுவிஸ் பிராங் | 355/= |
| அமெரிக்க டொலர் | 315/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 210/= |
| கனடா டொலர் | 243/= |
| சீன யுவான் | 45/= |
| யுரோ | 357/= |
| ஜப்பான் யென் | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 243/= |
| ஸ்ரேர்லிங் பவுண் | 418/= |
| சுவிஸ் பிராங் | 375/= |
| அமெரிக்க டொலர் | 328/= |




# இந்திய – சீனப் பொருளாதார தரவரிசை எவ்வாறுள்ளது?

உலக நாடுகளின் பொருளாதார நிலை குறித்த தரவரிசையை வெளியிட்டுள்ள அமெரிக்க நிதி நிறுவனமான மோர்கன் ஸ்டான்லி, இந்தியப் பொருளாதாரம் "ஓவர் வெயிட்" என்ற நிலையில் உள்ளதாகவும், சீனா சரிவில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஓவர்வெயிட் ரேட்டிங் என்பது பொருளாதாரம் சிறப்பாக இயங்கும் என்பதற்கான கணிப்பு. அந்த வகையில் எதிர்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் என்பதால் அதற்கு மோர்கன் ஸ்டான்லி ஓவர்வெயிட் தரம் வழங்கியுள்ளது. இதற்கு இந்திய அரசு பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொண்டதே காரணம் என்று தெரிவித்துள்ளது.

பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளானது வலுவான கேப்பெக்ஸ் எனப்படும் திட்டச்செலவு (capex - capital expenditure) மற்றும் இலாப போக்குக்கு வழி வகுத்துள்ளது என்று மோர்கன் ஸ்டான்லி அறிக்கை கூறுகின்றது.

இந்தியாவின் பொருளாதார ரேட்டிங் ஓவர்வெயிட் ஆக உள்ள நிலையில் அமெரிக்கா அதன் ட்ரிபிள் ஏ (AAA ) தகுதியை இழந்துள்ளது. சீனாப் பொருளாதார சரிவை நோக்கிச் செல்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. கொரோனாப் பெருந்தொற்றுத் தாக்கத்துக்குப் பின்னர் இந்தியப் பொருளாதாரம் மீண்டெழுந்து 6.2 சதவீத ஜிடிபி-யை நோக்கி முன்னேறுவதாக மோர்கன் ஸ்டான்லி நிறுவனம் தெரிவித்துள்ளது.

> ‘ இந்தியா தற்போது வளர்ந்துவரும் சந்தைகளில் மிகவும் வசீகரமானதாக இருக்கிறது. வெளிநாட்டு முதலீடுகள் காரணமாக இந்தியா முதலீட்டுச் சந்தை தரவரிசையில் 6ஆவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்தியா தற்போது நீண்ட வலுவான பொருளாதார வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறது ’

மேலும் அந்நிறுவனம், "இந்தியா தற்போது வளர்ந்துவரும் சந்தைகளில் மிகவும் வசீகரமானதாக இருக்கிறது. வெளிநாட்டு முதலீடுகள் காரணமாக இந்தியா முதலீட்டுச் சந்தைத் தரவரிசையில் 6 ஆவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்தியா தற்போது நீண்ட வலுவான பொருளாதார வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறது. சீனாவின் வளர்ச்சி முடிவுக்கு வரும் சூழலில் உள்ளது" என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மோர்கன் ஸ்டான்லி நிறுவனம் இந்தியப் பொருளாதார வளர்ச்சி அண்டர் வெயிட் ரேட்டிங்கில் இருந்து ஈக்வல் வெயிட் பிரிவுக்கு முன்னேறியதாக அறிவித்தது. இந்நிலையில், தற்போது அந்தத் தரவரிசையில் மீண்டுமொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வெகு குறுகிய காலத்தில் இந்தியப் பொருளாதாரம் இந்த வளர்ச்சி நிலையை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவ மைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுப வத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்ப டும். தொடர்புகளுக்கு - 0777277009

-------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந் துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பா ளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங் கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

-------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மை யில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற் பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

-------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத் தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத் திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நட வடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய் யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவ னத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும் புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவை யினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வும். (மின்னஞ்சலின் **subject** இல் **Soft ware and Web Developement** குறிப் பிட்டு அனுப்பவும்)

-------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப் படும். தொடர்புகளுக்கு 0777277009

-------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

-------------------------------------

### விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப் பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

-------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள் ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன் றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

-------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங் கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

-------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக் களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

-------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

-------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப் பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

-------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்கா ரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு

- 0773972309 மன்னார்.

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள் ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
| --- | --- |
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
| --- | --- |
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

--------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

--------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

--------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

--------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

--------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

--------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

--------------------------------------

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

--------------------------------------

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

--------------------------------------

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

--------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

--------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

--------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

--------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

--------------------------------------

### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

--------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

--------------------------------------

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457


--------------------------------------

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457



# பொருண்மியம் விருதுகள் - 2023

**அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க முடிவுத் திகதி ஒகஸ்ட் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் “கிரீன் மீடியா” நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் தமிழர் பொருண்மியம் நடத்தும் “கோடைக் கொண்டாட்டம்“ நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவர்கள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்,

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர், தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)
குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும், அத்துடன் எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பெனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.

**சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 31.08.2023**

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
**0777276949**

# Customs ஆல் கஷ்டம்

## வர்த்தக அடிப்படையிலான பணமோசடியைத் தடுக்கப் புதிய உடன்படிக்கை கைச்சாத்து



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்




**• Under Invoice செய்பவர்கள்**
**• பிழையான CUSDEC பாவிப்பவர்கள்**
**• வேண்டுமென்றே தவறான CUSTOMS Forms சமர்ப்பிப்பவர்கள் போன்றோருக்கு இந்தப் புதிய ஒப்பந்தம் பெரும் சவாலாக இருக்கப் போகின்றது.**

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (Trade-based money laundering (TBML)) அச்சுறுத்தலைத் தடுக்க ஏனைய நாடுகளில் செயற்படும் ஒத்த நிறுவனங்களுடன் இலங்கையின் சுங்கத்திணைக்களம் உடன்படிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக அடிப்படையிலான பணமோசடிகளைக் கண்டறியும் ஒப்பந்தம் சமீபத்தில் அவுஸ்திரேலியாவுடன் (Australia) கையெழுத்தான நிலையில், மாலைதீவு மற்றும் ரஷ்யாவுடனும் இதேபோன்ற ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், தகவல் பரிமாற்றம், பணமோசடி செய்பவர்களைக் கண்டறிதல் மற்றும் வரி ஏய்ப்பு ஆகியவற்றைக் கண்டறிய இலங்கைச் சுங்கத்திணைக்களம் அண்மையில் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தத் தகவல் பகிர்வு மற்றும் கண்டறிதல் தொடர்பில் இங்கிலாந்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதேவேளை இலங்கைச் சுங்கத்திணைக்களத்தின் சிறப்பு வருவாய் அதிரடிப் படையினர் நடாத்திய சோதனையில் இருந்து கடந்த ஆறு மாதங்களில் 1.1 பில்லியன் ரூபாய் சேகரிக்கப்பட்டுள்ளன. அதே நேரம் 2022ஆம் ஆண்டு முழுவதும் 1.1 பில்லியன் ரூபாய் மட்டுமே வருமானமாக சேகரிக்கப்பட்டதாகவும் இலங்கைச் சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (TBML) என்பது சர்வதேச வர்த்தக அமைப்பு மூலம் தங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளின் வருமானத்தைச் சட்ட பூர்வமாக்க குற்றவாளிகளால் பயன்படுத்தப்படும் ஒரு முறையேயாகும். உண்மையான நிதி ஆதாரத்தை மறைத்து அவை சட்டபூர்வமானதாக மாற்றியமைக்க விலைப்பட்டியல் போன்ற வர்த்தக பரிவர்த்தனைகளை கையாளுதல் இதில் அடங்கும்.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (TBML) என்பது குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்ற ஒரு முறை. சர்வதேச வர்த்தகப் பரிவர்த்தனைகளைக் கையாள்வதில் முறையான வர்த்தகத்தின் முகப்பைப் பராமரிக்கும், அதே வேளையில் கணக்கில் காட்டாத பணத்தை எல்லைகளுக்குள் நகர்த்துவதை உள்ளடக்குகிறது. உலகளாவிய நிதி அமைப்பைக் குறைமதிப்பிற்கு உற்படுத்தும் திறன் மற்றும் குற்றச் செயல்களை நிலைநிறுத்துவதற்கு வசதியாக இருப்பதால் உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு TBML ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

நிதிக் குற்றங்களைத் தடுக்க உலகளாவிய மற்றும் உள்ளூர் கட்டுப்பாட்டாளர்கள் உலகளவில் நிறுவப்பட்டுள்ளனர். மேலும் இந்தக் கட்டுப்பாட்டாளர்கள் கொள்கைகளை உருவாக்குகின்றனர். பணமோசடி எதிர்ப்பு (AML) என்பது குற்றவாளிகளின் நிதிக் குற்றங்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கியது. வர்த்தக அடிப்படையிலான பணமோசடி என்பது வழக்கமான பணமோசடி எதிர்ப்பு ((AML) Anti-Money Laundering) நடவடிக்கைகளின் இருப்பிட அமைப்பின்கீழ் செயற்படுகிறது.

வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் மூலம் நிதியை நகர்த்துவதற்கான பாரம்பரிய முறைகளைப் போலன்றி TBML ஆனது சர்வதேச வர்த்தகத்தின் சிக்கலைப் பயன்படுத்தி சட்டவிரோத நிதிகளின் மூலத்தையும் இயக்கத்தையும் மறைக்கின்றது. குற்றவாளிகள் வர்த்தகப் பரிவர்த்தனைகளைக் கையாள்வதில் சரக்குகளை மற்றும் பொருட்களை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மதிப்பிடுகின்றனர். இது பொருட்களின் கூறப்பட்ட மதிப்புக்கும் அவற்றின் உண்மையான மதிப்புக்கும் இடையே பொருந்தாத தன்மையை உருவாக்குகிறது. இந்த முரண்பாடு, முறையான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது நிதியைப் பரிமாற்ற அனுமதிக்கிறது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடியின் (TBML) பொதுவான நுட்பங்கள் பின்வருமாறு அமைகின்றன.

1. பொருட்களுக்கு அதிக/குறைவான




விலைப்பட்டியல் தயாரித்தல்: குற்றவாளிகள் எல்லைகளுக்குள் அதிகப்படியான நிதியை நகர்த்துவதற்காக விலைப்பட்டியலில் உள்ள பொருட்களின் மதிப்பை அதிகமாகக் குறிப்பிடுகின்றனர். மாறாக, மற்ற தரப்பினருக்கு இரகசியமாகப் பணத்தை அனுப்புவதற்கான மதிப்பை அவர்கள் குறைத்து மதிப்பிடலாம்.

2. சரக்குகளை/ பொருட்களை தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் சித்தரித்தல்: குற்றவாளிகள், உண்மையில் கொண்டு செல்லப்படுவதை விட வேறு வகையான சரக்குகளைக் கப்பல் ஆவணங்களில் அறிவிக்கலாம். இது பொருட்களின் மதிப்பைக் குறைத்து அல்லது அதிகமாகப் புகாரளிப்பதற்கான வாய்ப்பை உருவாக்குவதுடன் இது சட்டவிரோத நிதிப் பரிமாற்றங்களுக்கு வழிவகுக்கின்றது.

3. பொய்யான/ தவறான கப்பல் ஆவணங்களைப் பயன்படுத்துதல்: மோசடியான விலைப்பட்டியல்கள் மற்றும் பிற கப்பல் ஆவணங்கள் முறையான வர்த்தகத்தின் தோற்றத்தை உருவாக்கப் பயன்படுத்தப்படும் அதே நேரம் நிதி இரகசியமாக மாற்றப்படுகின்றது.

4. இல்லாத பொருட்களுக்கான பரிவர்த்தனைகளை உருவாக்கல்: இந்த "பாண்டம் ஷிப்மென்ட்கள்" நிதி பரிமாற்றங்களை நியாயப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. நடைமுறையில் அவை கண்டுபிடிக்கக் கடினமாக இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (TBML) காரணமாக உலகளாவிய நிதி அமைப்பிற்கு, பாதுகாப்பிற்கு மற்றும் பொருளாதாரத்திற்கு ஒரு பன்முக அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

1. பொருளாதாரத் தாக்கம்: TBML வர்த்தக புள்ளிவிவரங்களைச் சிதைத்து, பணம் செலுத்தும் சமநிலையைப் பாதிக்கும். இதன் காரணமாக பொருளாதார குறிகாட்டிகளின் துல்லியத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது.

2. சட்டவிரோத நிதியுதவி: போதைப் பொருள் கடத்தல், மனிதக் கடத்தல் மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளின் வருமானத்தை சட்டப்பூர்வமாக மாற்றியமைக்கக் குற்றவியல் நிறுவனங்கள் TBMLஐப் பயன்படுத்துகின்றன.

3. வளங்களின் பயன்பாட்டினை வலுவிழக்கச் செய்கின்றது: TBMLக்கு அரசாங்கங்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கணிசமான ஆதாரங்கள்/ வளங்கள் தேவையாக இருப்பதனால் இது மற்றைய முக்கியமான சட்ட அமுலாக்க நடவடிக்கைகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்புகிறது.

4. பணமோசடித் தடுப்பு (AML) அமைப்புகளில் காணப்படும் பலவீனம்: வர்த்தக பரிவர்த்தனைகளின் சிக்கலான தன்மை மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாததால் பாரம்பரிய AML அமைப்புகள் TBMLக்கு எதிராக குறைவான செயற்றிறன் கொண்டவையாக உள்ளன.

சர்வதேச வர்த்தகத்தின் நுணுக்கங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அதன் திறன், அதன் நிகழ்வைக் கண்டறிந்து தடுப்பதற்கான விரிவான நடவடிக்கைகளின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஒத்துழைக்க வேண்டும். மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும் மற்றும் TBMLஇல் ஈடுபடும் குற்றவாளிகள் பயன்படுத்தும் தந்திரங்களை விட ஒரு படி மேலே இருக்கத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் மட்டுமே இந்த இரகசிய அச்சுறுத்தலின் அலைகளைத் தடுத்து உலகளாவிய நிதிய நிலப்பரப்பின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முடியும்.

TBMLஐ எதிர்த்துப் போராடுவதற்கு அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு இடையே அதிகப்படியான செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. அவற்றில் சில பின்வருமாறு காணப்படுகின்றன.

1. மேம்படுத்தப்பட்ட விடாமுயற்சி: வர்த்தக பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தல், ஆவணங்களின் நம்பகத்தன்மையைச் சரிபார்த்தல் மற்றும் அசாதாரண வடிவங்களைக் கண்டறிய மேம்பட்ட பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட கடுமையான விடாமுயற்சிச் செயன்முறைகளை நிதி நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும்.

2. தகவல் பகிர்வு/ பரிமாற்றம்: நாடுகள், சட்ட அமுலாக்க முகவர் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையே மேம்படுத்தப்பட்ட தகவல் பகிர்வு மேற்கொள்வதன் மூலம் சந்தேகத்திற்குரிய வர்த்தக பரிவர்த்தனைகளை மிகவும் திறம்பட அடையாளம் காண உதவும்.

3. மேம்பட்ட தொழில்நுட்பங்கள்: சங்கிலி இணைப்பு/ தொடரேடு (block chain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் அதிகப்படியான தகவல் பகுப்பாய்வு (big data analytics) போன்ற தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பு வர்த்தகப் பரிவர்த்தனைகளில் வெளிப்

(23ஆம் பக்கம் பார்க்க)

# இளைஞர்கள் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும்




இலங்கையின் திருகோணமலையின் மத்திய பிரதேசத்தில் அமைந்திருக்கும் ஒரு பகுதியில் தான் இந்நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் அமைக் கப்பட்டிருக்கிறது. ஜெயதீபன் ஜோசப் என்கின்ற ஒரு தனி மனிதனின் ஆசையும் கனவும் இன்று ஒரு கூட்டு நிறுவனமாக இயங்குவதற்கு வித்திட்டிருக்கிறது.

இந்த நிறுவனத்தின் நிறுவுனர் ஜெயதீபன் ஜோசப் புலம்பெயர்ந்து குளிர் நாடொன்றில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தாயக மக்களின் நன்மை கருதி ஒரு முதலீட்டினைச் செய்ய எத்தனித்திருக்கிறார். ஆரம்பத்தில் பல இடர்களையும் ஏமாற்றங்களையும் சந்தித்த ஜெயதீபன் சோர்ந்து விடாமல் தனக்கான மனிதர் களையும் தன் நிறுவனத்திற்கான தொழில் வல்லுனர்களையும் தேடும் மிகப்பெரிய பணியில் இன்று வெற்றிகரமாகச் சாதித்து இருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும்.


ஆரம்ப காலங்களில் மிகப்பெரிய முதலீடுகளைத் தகுந்த திட்டமிடல் இன்றி தான் இழந்து விட்டதாக நினைக்கும் இவர், சரியான திட்டம் மற்றும் சிறந்த தொழிலாளர்கள் என்று தனது கம்பெனியை அடுத்த கட்டங்களுக்கு விருத்தி செய்யும் ஒரு சிறந்த நோக்கோடு இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். பல்வேறு சமூக நல நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனமானது ஒரு சிறந்த தொழில் கூடமாக, மற்றும்சமூக சேவை நிறுவனமாக, வியாபார ஸ்தலமாக என்று தனது வேலை திட்டங்களைப் பரந்து விரித்து இருக்கிறது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை விலகியவர்களும் பகுதி நேரமாக தொழில் செய்து மேலைத்தேய நாடுகளைப் போலத் தமது வாழ்வாதாரத்திற்கான தேவையை அவரவர் நிறைவேற்றக்கூடிய அளவிற்கு பொருள் ஈட்டும் வாய்ப்பையும் வழங்கி இருக்கிறார். வாய்ப்புகளையும் திறமைகளையும் சரியாகப் பயன்படுத்துவோருக்கு JB Group ஒரு மிகச்சிறந்த வாய்ப்பாகும் தையல், அழகுபடுத்தல், மற்றும் ஆடைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்தல் என்று இன்ன பிற வருமானம் ஈட்டும் தொழில்களோடு தமது பிரதேசத்தைச் சுற்றியுள்ள பலருக்குத் தொழில் பயிற்சிகளையும், தொழில் வாய்ப்புகளையும் வழங்கி வருகிறது இந்த நிறுவனம்..

ஆரம்பத்தில் மிகச் சிறந்த நோக்கோடு இந்த நிறுவனம் பயணப்பட்டபோது பல இடர்களைச் சந்திக்க வேண்டி இருந்தது.

**“தொழில் வாய்ப்பை தேடி அலைகின்ற பல பேருக்கு நம்மால் பல்வேறுபட்ட துறைகளில் தொழில் வாய்ப்பை வழங்க முடியும், அதற்கான பயிற்சிகளை பெற்றுக்கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுத்து இருக்கிறது இந்த நிறுவனம். உண்மையிலேயே திருகோணமலையில் மட்டுமல்லாது சகல மாவட்டங்களிலும் தனது கிளைகளை நிறுவுவதற்கு ஆவலுடன் இருக்கும் இந்நிறுவனத்தின் தலைவர் ஜோஷப் ஜெயதீபன் பலருக்கு ஒரு மிகச் சிறந்த முன்னுதாரணமாக விளங்கி வருகிறார்.”**

JB Group நிறுவுனர் ஜெயதீபன் ஜோசப் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்காற்றும் நோக்கோடு செயற்பட்டு, குறுகிய காலத்தில் பாரிய வளர்ச்சியை எட்டி இருக்கும் சமூக அக்கறையுள்ள நிறுவனமாகத் திகழ்கின்றது JB Group.




**நேர்கண்டவர் - ஞா.கவினி**

நம்பிக்கையற்ற மனிதர்கள், அமைவிடம், மூலப் பொருள் என்று பல்வேறு பட்ட பிரச்சனைகளை எதிர்கொண்டாலும் தனது விடாமுயற்சியில் இன்று வெற்றி கண்டிருக்கிறார்.

தொழில் வாய்ப்பைத் தேடி அலைகின்ற பல பேருக்கு நம்மிடம் பல்வேறுபட்ட துறைகளில் தொழில் வாய்ப்பை வழங்க முடியும், அதற்கான பயிற்சிகளைப் பெற்றுக்




கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுத்து இருக்கிறது இந்த நிறுவனம். உண்மையிலேயே திருகோணமலையில் மட்டுமல்லாது சகல மாவட்டங்களிலும் தனது கிளையை நிறுவுவதற்கு ஆவலுடன் இருக்கும் இந்நிறுவனத்தின் தலைவர் ஜோஷப் ஜெயதீபன் பலருக்கு ஒரு மிகச்




சிறந்த முன்னுதாரணமாக விளங்கி வருகிறார்.


ஆடை வடிவமைப்பு தொடக்கம் நுண் வரை கலைகள் வரை அடுத்தடுத்து தனது திட்டங்களை அழகாக நகர்த்திக் கொண்டிருக்கும் இவர்களோடு சேர்ந்து பயணிப்பதற்கு மற்றும் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு ஆவலாய் இருப்பவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொழில் மீதான பற்றுறுதியுடன் கூடிய விடா முயற்சியும் நம்பிக்கையும் ஒரு நிறுவனத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையாக இருந்தாலும் அர்ப்பணிப்பான மற்றும் நம்பிக்கையுள்ள ஊழியர்களே ஒரு நல்ல நிறுவனத்தை மேலே கொண்டு செல்வதற்கு காரணிகளாக அமைகின்றனர் என்கிறார் தீபன்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான இடத்தைக் கொடுத்து சிறந்த, தகமைகளுக் கேற்ற பதவிகளில் அமர்த்தி இருக்கும் இவரது நிர் வாகத் திறமை மற்றும் கடின உழைப்பு என்பன இந் நிறுவனத்தை பலர் மெச்சுவதற்கு காரணமாக அமைகின்றது. புதிது புதிதான திட்டங்களோடு தன்னிடம் வருபவர்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து இவர்களோடு இணைத்துக் கொள்வதற்கு ஆர்வமாய் இருக்கும் இந்நிறுவனத்தின் தலைவரின் கனவுகளாக சகல மாவட்டங்களிலும் பரந்துபட்டு இருபதுக்கு மேற்பட்ட கிளைகளை நிறுவ வேண்டுமென்றும் அந்த அந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும் என்றும் சொல்கிறார்.

உண்மையில் இளைஞர்களிடம் எதுவும் குறை கூறுவதற்கில்லை, அவர்களிடம் நிறையவே சமூக அக்கறை இருக்கிறது, ஆனால் அவர்களை சரியான திசையில் வழி நடத்துவதற்கு ஏற்ற தலைமைகள் கிடைப்பது தான் பெரும் கஷ்டமாக இருக்கிறது. உண்மையில் இது ஒரு துர்ப்பாக்கியமான விடயம். இன்றைய இளைஞர்கள் எமது தேசத்தின் வளங்கள் அவர்களைச் சரியான நேரத்தில் சரியான திசையில் வழிநடத்துவோமாக இருந்தால் எமது நாட்டின் பொருளாதாரத்தை மாத்திரமல்ல சகல வளங்களையும் கட்டி எழுப்பக்கூடிய ஒரு சிறந்த நாடாக இலங்கை மாறும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

ஆகவே ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கான தொழிலை தக்கவைத்துக் கொள்வதோடு தொழில் அறிவை வளர்த்துக் கொள்வதிலும் ஆர்வம் காட்ட வேண்டும். அதிலும் குறிப்பாக இளையவர்கள்




ஒவ்வொருவரும் தம்முடைய தனித் திறமைகளை அடையாளம் கண்டு அதற்கு ஏற்றால் போல் தம்மை வளர்த்துக் கொள்ள பிரயத்தனபட வேண்டும். ஒரு சிறந்த எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்க விரும்பும் உங்கள் அனைவருக்கும் ஜே.பி.குரூப் என்றும் துணை இருக்கும் என்கிறார் இந்நிறுவனத்தின் தலைவர் ஜோசப் ஜெயதீபன்.





- தமிழ்க்கவி -

# எல்லை வேலி

வேலிகள் பொக்கிஷங்கள். இந்தக் வேலிகளில் பூவரசு முருங்கை, கிழுசூரியா, கிழுவை, ஆமணக்கு பீர்க்கு, சுரை. பேய்ப்புடல், மொசு மொசுக்கை, முடக்கத்தான், பெருமருந்து, குன்றிமணி, பிரண்டைச் சங்குபுஸ்பம், சாத்தாவாரி, செம்பருத்தி இன்னும் எத்தனை எத்தனை மூலிகைகளை வளர்க்கலாம். இதில் பாதியாவது எனது வேலியில் படருவதால்தான் நான் ஆரோக்கியமாக இருக்கிறேன்.

“இவருக்கு வருத்தம் கடுமை. வீட்டில ஆக்கள் இல்லை விட்டிட்டு ஆசுபத்திரிக்குப் போனன். வந்து பாத்தா தோட்டத்துக்க மாடு பூந்திட்டுது.”

“ஏனடியப்பா இவள நாளா தோட்டஞ் செய்யிறியள் வேலியை அறிக்கையா அடைக்கிறதுக்கென்ன?’ காணி வாங்கியும் ஆறேழு வரியமாச்சு உய்கதியால் நட்டிருந்தாலே வளர்ந்திருக்குமே” என்று அதட்டினேன் .

“காணி தரயுக்கயே சொல்லித்தான் தந்தவங்கள். பங்கெல்லை வேலியளுக்கு உய்கதியால் போட வேண்டாமெண்டு. அதால போடேல்ல அப்ப பக்கத்தில உள்ளவையட காணிக்க வந்துதானே மாடு உன்ர வளவுக்க வந்திருக்கு அவை என்ன செய்யினம்”

“அதுகளெங்க காணிக்கயே இருக்ககிதுகள் மாகாலத்தில வந்து உழுந்தைப் பயறை விதைச்சு எடுத்தா அதோட போயிருங்கள். பிறகும் அடுத்த போகத்துக்குத்தான்.”

“குடியிருக்கத்தானே வீட்டோட காணி குடுத்தவங்கள் அப்ப அவை விட்டிட்டு போயிருக்கிறதும் பிழைதானே. உதையேன் சொல்லயில்ல.”

“ஆரிட்டச் சொல்லுற”அவள் அலுத்துக் கொண்டு போகிறாள்.

எங்களுடைய பொருளாதாரம் என்பது வேலி தொட்டு விராய் வரைக்கும் பரவித்தான் இருக்கிறது அதென்ன விராய் என்கிறீர்களா சும்மா ஒப்புக்குச் சொல்வதுதானே என்பதல்ல, விராய் என்பது வேலியிலிருந்து பெறப்படும் கிளைகள், தடிகள், காய்கள் பழங்கள் என அமையும் வேலியின் பயன்பாடுகள் அவை.

ஒருவர் தனது நிலத்தில் படரக்கூடிய வான் பயிர்களை நடும்போது அது எல்லை வேலிக்கு நான்கடி தள்ளித்தான் நடவேண்டுமாம். அது மட்டுமல்ல அடுத்தவருடைய நிலத்தில் வளர்ந்து நிற்கும் பெருமரங்களின் நிழல் எமது நிலத்தில் பெரும்பகுதியை நிழலாக்கி அதன்மூலம் எனது பயிர்கள் பாதிக்கப்பட்டால். நான் அவற்றை வேலிக்குள் நின்று வெட்டி அகற்ற முடியாது. அது என்னைப் பாதிக்கிறது என்பதை அந்த மரத்தின் சொந்தக்காரரோடு பேசித் தீர்க்க முடியாது போனால் அவர் நீதிமன்றை நாட வேண்டும். மன்றின் உத்தரவு கிடைத்தால் மட்டுமே அந்த மரத்தின் கிளைகளை வெட்டலாம். (படித்த ஒரு கவிதை மேலே படரும் என் கிளைகளை வெட்டிய தோட்டக்காரனே கீழே படரும் என் வேர்களை என்ன செய்வாய்)

இதேவகையில் நான் வேலியில் நட்ட முருங்கைகளில் அவர் காய்களைப் பறிக்க முடியாது. படரும் கொடிகளான தூதுவளை, மொசுமொசுக்கை, பீர்க்கு, அவரை இவையும் அடுத்த காணிக்காரருக்கு இடைஞ்சலாக இருந்தாலும், அவர் அதிலிருந்து காய்களைப் பறிப்பது சட்ட விரோதமே. மனமொப்பி வேலிப்பயிர்களை இருபகுதியினரும் நட முடியுமா? அதற்கும் எமது கௌரவம் இடங் கொடாது. வேலி யாருக்கு சொந்தம் என்பதே ஏராளமான வழக்குகளாக நீதிமன்றங்களில் உலவியிருக்கின்றன.

தேசவழமைச் சட்டத்தின்படி ஒவ்வொரு காணிக்காரரும் இரண்டு அல்லது மூன்று பக்க வேலிகளுக்கே உரிமை கொண்டாடலாம். அந்தக் காணியை அடுத்து வரும் ஒழுங்கை வீதிகளும் இந்தத் தீர்மானத்தில் கணிக்கப்படும். இதன்படி தெருக்களை அண்டியதாக வந்தால், நிலைமை மாற்ற மடையும். முன்னரே குடிவந்து வேலி போட்டு ஒருவர் வாழும் நிலையில் பல வருடங்கள் கழித்து குடியேறும் பக்கத்துக் காணிக்காரர் எல்லை வேலியில் பங்கு கேட்க முடியுமா? என்றால் முடியும். அதுவும் மதில் கட்டுவதாயினும் ஒவ்வொருவருக்கும் பாதிப்பாதி மதில் வரும்.

ஒரு நிலத்தை காடுவெட்டி எல்லை போட்டு வாழ்ந்த ஒருவர் தனது எல்லை முழுதும் பனம் விதைகளை நாட்டிவைத்தார். பனையைப்பற்றித் தெரியும் தானே அதை நிலத்தில் போட்டால் போதும் அது முளைத்து வந்துவிடும். அவர் இறந்து போக நிலம் மகளுக்கு வந்து மகளின் மகனும் வளர்ந்து விட்டான். இப்போது பத்தடிக்கொன்றாக நாற்புறமும் பனை விருட்சமாகி வளர்ந்திருந்தது. காய்கள், பழங்கள், விதைகள், மட்டைகள் என பெரும் பயனை தந்துகொண்டிருந்தன.

பலவருடங்கள் கழித்துப் பக்கத்தில் காடுவெட்டிக் குடி வந்த ஒருவர் அந்தப் பனைபடர்ந்த வேலி தனக்கே உரியதென்று வழக்கொன்றைப் போட்டார். ஊரில் சொல்வார்களே ஒரு பழமொழி. 'கள்ளன் கையில கொடுத்தாலும் பல ஆயிரம் தேறும் பெரிய பனை மரங்கள்' ஒன்று இரண்டு அல்ல பதினேழு மரங்கள். நாற்புறமும் வேலியமைத்த அந்தப் பெண்ணுக்கு அவற்றை இழக்க மனம் வருமா? அவள் வேலியைக் கொடுக்க சம்மதித்தாள். பனைகளைத் தரமாட்டேன் என்றாள். சட்டம் திக்குமுக்காடியது.

வேலிப்பயிரைப் பொறுத்தவரை நட்டவருக்கே சொந்தம். வேலியைப் பொறுத்தவரை பக்கத்துக் காணிக்காரருக்கே சேர வேண்டும். இருவருமே மனமொத்துப் போகாமல் பலவருடங்கள் தவணையில் ஓடியது வழக்கு. பெரும் போர் வந்து அனைவருமே காணிகளை விட்டு வெளியேறி அகதிகளாகி விட்டனர். பனைமரங்களின் கதியைச் சொல்ல வேண்டுமா? அவை பெரும்பாலும் பங்கர்களில் படுத்தன.

இப்போது நாமும் ஒரு முடிவுக்கு வந்தோம். உய்கதியால்களை



நட்டால் இப்படி வளரும் பிரச்சினைகளை நிறுத்தவே அவற்றை நடவேண்டாம் எனக் காணிக்கச்சேரியில் கூறப்பட்டாலும் அது சட்டமல்ல. குடியிருப்பவர் அதுவும் பயிர் செய்பவருக்கான பாதுகாப்பு இந்தக்காலத்தில் மிக முக்கியம். குடியிருக்காதவருக்கு காணியும் வீடும் கொடுத்ததால் இந்தப்பிரச்சினை.

"பேசாமல் காட்டாமணக்கு விதைகளையோ இப்பிலிப்பில் விதைகளையோ வேலிக்குள் விதைத்து விடும்படி நான் கூறினேன். அவை மாரிக்கு முளைத்து மெள்ள மெள்ள வளர்ந்துவிடும்" என்றேன். நெருக்கமாக முளைக்கச் செய்தால் கம்பி இல்லாது போனாலும் வேலி உறுதியாகிவிடும். அந்தக்காலத்தில் நிரைகட்டை போட்டே பெரும் குழுமாடுகளை சமாளிக்கவில்லையா? இருக்கிறது அரை ஏக்கர்நிலம். அதுதான் ஜீவாதாரம். அதை பாதுகாக்க வேண்டாமா? அவள் யோசித்தாள் 'அது மத்தையாகிப் போகாதா?'

அவை முளைத்து வளர்ந்து வேலிக்கு மேலாக வரும்போதெல்லாம் கழித்துவிடும் கிளைகள் விறகாகும் குழைகள் விலங்குகளுக்கு உணவாகும். நிரம்ப முளைத்து விட்டால் பக்கத்தில் உள்ளவரும் வெட்டட்டுமே. அதனால்என்ன நட்டம்காணியைப்பாதுகாப்பாக



வைத்திருக்கலாமே என்றேன்.

பெரும்பாலும் கால்நடைகளும் இப்போது மிகத் திறமைசாலிகளாகவே இருக்கின்றன. அவை நீளம்பாய்தல் உயரம்பாய்தல், தடைதாண்டி ஓடுதல் என அனைத்திலும் திறமை பெற்றே இருக்கின்றன. எனவேதான் குறிப்பிட்ட போக நெற்செய்கைக் காலங்களில் அவற்றைக் கட்டி மேய்க்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. ஆனால் அதைப் பெரும்பாலானவர்கள் பின்பற்றுவதில்லை குறிப்பாக அப்படிக் கட்டுடைத்துத் திரியும் கால்நடைகள் கமவிதானை கமநலசேவை முகவர்களுடையதாகவே இருப்பதாக முறைப்பாடும் உள்ளது.

சிறிய அளவில் ஆடு. மாடு வளர்ப்பவர்களுக்கான மேய்ச்சற்றரவைகள் அனைத்தும் அடாத்துக் குடியேற்றங்களால் பறிபோயுள்ளன. குறிப்பாகக் குளங்களின் அலைகரைகள் சில இடங்களில் நடுக்குளங்கள் வரை காணிகளைப் பிடித்து வைத்துள்ளனர். அதையும் பெரும் பணக்காரர்களும் மேற்குறித்த பதவிகளில் இருப்போருமே செய்வதால் பேச முடியவில்லை. இதுவும் ஒரு வேலியே பயிரை மேயும் செயல்தான்.

'வேலியை மதிலா கட்டி விடலாமே ஒரு பிரச்சினையும் வராது.' என்றார் நண்பர் ஒருவர். "இது நிலவுக் கொழிச்சு பர தேசம் போன கதைதான்."

வேலிகள் பொக்கிஷங்கள். இந்த வேலிகளில் பூவரசு முருங்கை, கிழுசூரியா, கிழுவை, ஆமணக்கு, பீர்க்கு, சுரை. பேய்ப்புடல், மொசு மொசுக்கை, முடக்கத்தான், பெருமருந்து, குன்றிமணி, பிரண்டை சங்குபுஸ்பம் சாத்தாவாரி, செம்பருத்தி இன்னும் எத்தனை எத்தனை மூலிகைகளை வளர்க்கலாம். இதில் பாதியாவது எனது வேலியில் படருவதால்தான் நான் ஆரோக்கியமாக இருக்கிறேன்.





# அதிக இலாபம் தரும்வகையில் திராட்சை செய்வது எவ்வாறு?

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



எந்த ரகம் என்றாலும், பருவத்துக்கேற்பப் பயிர் செய்து, அழுகல் நோயிலிருந்து காத்து, அறுவடை செய்தால், திராட்சையில் கிடைக்கும் இலாபம் அதிகம்தான்.

ஒரு ஏக்கரில் 120 நாளில் இலங்கை ரூபாய் 100 இலட்சத்துக்கும் அதிகமாக இலாபம் சம்பாதிக்கலாம்.

அதிகமான மக்களால் விரும்பி உண்ணக்கூடிய பழங்களில் ஒன்று திராட்சை.

மேலத்தேய நாடுகளில் மாத்திரம் அல்லாமல் தற்பொழுது பல நாடுகளில் பரவலாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற பழங்களில் ஒன்றாகும்.

திராட்சைச் செய்கைக்கு நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண் அல்லது செம் மண் இருத்தல் வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை ஒரு சில விவசாயிகள் மாத்திரமே திராட்சை பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள ஆர்வம் காட்டுகின்றார்கள்.

நட்டம் ஏற்பட்டு விடுமோ என்ற ஐயப்பாடு தான் இதற்குக் காரணமாக அமைகின்றது.

முயற்சி செய்யாமல் எதையும் சாதிக்க இயலாது என்பதையும் நாங்கள் நினைவில் வைக்க வேண்டும்.

பன்னீர் திராட்சை இரகங்களை நடும் பொழுது கட்டாயம்

1 1/2 அடி நீள, அகல, ஆழத்தில்,

10 அடி இடைவெளியில் குழிதோண்ட வேண்டும்.

மற்ற இரகங்களாக இருந்தால் 1×1×1 அடி என்ற அளவுகளில் குழிகள் எடுக்க வேண்டும்.



நன்கு மக்கிய தொழுவுரம், அல்லது பசுந்தழை உரம் அல்லது குப்பைகளைக் கொண்டு நடுகைக்கு 15 நாட்களுக்கு முன்பு குழிகளை நிரப்ப வேண்டும். பின்பு ஜூன், ஜூலை மாதத்தில் வேர் வந்த முற்றிய குச்சிகளை நடவு செய்ய வேண்டும். பன்னீர்த் திராட்சையாக இருந்தால் 10 × 12 இடைவெளி விட்டு நடுவது சிறந்ததாக இருக்கும்.

செடிகள் நட்ட உடனே நீர் பாய்ச்ச வேண்டும். அடுத்த மூன்றாவது நாள் மீண்டும் தண்ணீர் இட வேண்டும்.

அதைத் தொடர்ந்து வாரத்திற்கு இரு முறை அல்லது மூன்று முறை நிலத்தின் ஈரப் பதத்தினை அறிந்து கட்டாயம் நீர் பாய்ச்ச வேண்டும்.



**"பன்னீர்த் திராட்சையாக இருந்தால் ஒரு வருடத்திற்கு ஏக்கருக்கு 30 டன் கிடைக்கும். அதுவே பச்சைத் திராட்சையாக இருந்தால் 40 டன் வரை கிடைக்கும். மற்றபடி விதையில்லாத இரகங்கள், வீரிய ஒட்டு இரகங்கள் என்றால் முறையே 15, 20 டன் பழங்கள் வரை கிடைக்கும்."**

திராட்சையை பொறுத்தவரை மற்ற பழ மரங்கள் போன்று இல்லை.

மாறாகத் திராட்சைச் செடியினை கவ்வாத்து செய்ய வேண்டும் என்றாலும்,

அறுவடை செய்ய வேண்டும் என்றாலும்.

இச்செடிக்கு 15 நாட்களுக்கு முன் நீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும்.

கொடி வளர்ப்பும்

கவ்வாத்துமுறையும்

நடவு செய்த செடி வளர வளர அதை ஒரே தண்டாகப் பந்தல் உயரத்திற்கு கொண்டு வரவேண்டும்.

பின்னர் பக்கவாட்டில் இரண்டு அல்லது மூன்று அடி வளர்ந்த பின்பு நுனியைக் கிள்ளி விடவேண்டும்.

கிள்ளிய பகுதியிலிருந்து புதிதாக ஓரிரு பக்கக் கிளைகள் வளர ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில். பக்கக் கிளைகளை எதிரெதிர் திசைகளில் பரவவிடவேண்டும். இக்கிளைகளை மேலும் மேலும் இரண்டு அடி பக்கவாட்டில் வளர்ந்த பின்பு நுனிகளை கிள்ளிவிட்டுத் திராட்சைக் கொடிப் பந்தல் முழுவதும் படரச் செய்ய வேண்டும்.

பொதுவாக நான்கு மொட்டு என்ற நிலையில் கவ்வாத்துச் செய்வார்கள். அது எந்த இரகத் திராட்சை என்பதைப் பொறுத்து இரண்டு மொட்டு நிலையிலும் கவ்வாத்து செய்வது உண்டு. அதேபோல், கோடைக் காலப் பயிராக இருந்தால் டிசெம்பர் அல்லது ஜனவரியிலும், மழைக்காலப் பயிராக இருந்தால் மே அல்லது ஜூனில் கவ்வாத்து செய்ய வேண்டும்.

செடியின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இயற்கை உரங்களைச் சரியான முறையில் சரியான நேரத்தில் இடவேண்டும்.

இதற்கு மக்கிய உரம், மண்புழு உரம், தொழுஉரம், போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்த முடியும்.

அதோடு இயற்கைப் பயிர் வளர்ப்பு ஊக்கிகளான மீன் அமிலம், ஜீவாமிர்தம், பஞ்சகாவ்யா போன்றவற்றைப் பயன்படுத்தி வந்தால் இலை புழுக்கள் இல்லாமல் அதிக பச்சையம் உள்ள ஆரோக்கியமான செடிகளை உருவாக்க முடியும்.

முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, பந்தல் முழுவதும் கொடிகள் நன்கு படர்ந்து வளர வகைசெய்ய வேண்டும். அதற்க்கு நுனியை அவ்வப்போது வெட்டி விடுவது அவசியம்.

இதனையே நாங்கள் மேலே கவ்வாத்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளோம்.

தாய்க் கொடியையும் பக்கவாட்டில் வளரும் கொடிகளின் நுனியையும் 12 முதல் 15 மொட்டுகள் விட்டே வெட்ட வேண்டும். அதிகமாகத் திராட்சைக் குலைகள் உள்ள கொடியாக இருந்தால், அதனை பந்தல் உடன் சேர்த்துக் கட்டவேண்டும்.

வண்டுகள், இலைப் பேன்கள், மாவு பூச்சிகள் தண்டு துளைப்பான்கள் போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த இயற்கை முறை பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தலாம். பூச்சிகளின் தாக்குதல் அதிகம் இருந்தால். இயற்கை முறையிலான பூச்சிக்கொல்லிகளில் வீரியத்தினைக் கூட்டி பயன்படுத்துங்கள்.

இரசாயனப் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதாக இருந்தால் விவசாய ஆய்வாளர்கள் ஆலோசனைப் படி செய்வது நல்லது.

பழங்கள் சீராகப் பழுப்பதற்கும், பழங்கள் மெழுகு போன்று அழகாக இருப்பதற்கும். திராட்சை கரைசலை. காய விட்ட 20-வது நாளிலும் 40ஆவது நாளிலும் தெளிக்க வேண்டும்.

திராட்சைக் கரைசல் உற்பத்தி செய்யும் முறையினை இணையத் தளம் ஊடாக சென்று பார்த்துக்கொள்ளலாம்.

பன்னீர் திராட்சையாக இருந்தால் ஒரு வருடத்திற்கு ஏக்கருக்கு 30 டன் கிடைக்கும். அதுவே பச்சைத் திராட்சையாக இருந்தால் 40 டன் வரை கிடைக்கும். மற்றபடி விதையில்லாத இரகங்கள், வீரிய ஒட்டு இரகங்கள் என்றால் முறையே 15, 20 டன் பழங்கள் வரை கிடைக்கும்.


எந்த இரகம் என்றாலும், பருவத்துக்கேற்ப பயிர் செய்து, அழுகல் நோயிலிருந்து காத்து, அறுவடை செய்தால், திராட்சையில் கிடைக்கும் இலாபம் அதிகம்தான்.

ஓர் ஏக்கரில் 120 நாளில் இலங்கை ரூபாய் 100 இலட்சத்துக்கும் அதிகமாக இலாபம் சம்பாதிக்கலாம்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Ph: 0770239784
WhatsApp:0769196445





- குணசேகரன் -

பெரும்பாலான 'இன்ஃப்ளூயன்சர்'கள் முழு நேரப் பணியாக மார்க்கெட்டிங் பணியில் இயங்குவதில்லை. பகுதிநேர வேலையாக மட்டும் இதை அணுகும் இவர்கள், சமூக வலைத்தளத்தின் பயன்பாட்டைச் சுயமாகக் கற்றுக்கொள்கிறார்கள். அதன் மூலம் வருமானம் ஈட்டுகிறார்கள்.

# 'இன்ஃப்ளூயன்சர்'களின் தொழில் எதிர்காலம்?

இணையம் இலங்கை உட்பட ஆசிய நாடுகளில் கால் பதித்து 25 ஆண்டுகளைக் கடந்துவிட்டாலும், "டிஜிட்டல் மார்க்கெட்டிங்" இப்போதுதான் உச்சத்தில் இருக்கிறது. 2010க்குப் பிறகு சமூக வலைத்தளங்கள் மெதுவாக வளரத் தொடங்கின. சமூக வலைத்தளங்களின் ஆதிக்கத்தைத் தொடர்ந்து டிஜிட்டல் மார்க்கெட்டிங்கும் பேசுபொருளானது. இப்போது வர்த்தகத் துறையில் உள்ளவர்களால் அதிகளவுக்குப் பேசப்படும் சொல்லாக டிஜிட்டல் மார்க்கெட்டிங் என்ற சொல் உள்ளது.

குறிப்பாக இன்ஸ்டகிராம், யூடியூப் போன்ற சமூக வலைத்தளத்தின் வளர்ச்சியால் கடந்த சில ஆண்டுகளாக 'இன்ஃப்ளூயன்சர்'கள் எனப்படும் சமூக வலைத்தளப் பிரபலங்களைப் போன்றவர்களுக்கான மார்க்கெட்டிங் சார்ந்த பணிகள் அதிக கவனம் ஈர்க்கத் தொடங்கின. இந்தச் சூழலில் விளம்பரத் துறையின் முக்கிய அங்கமாக மாறியிருக்கும் 'இன்ஃப்ளூயன்சர்' மார்க்கெட்டிங் பணிகளில் இளைஞர்கள் பலரும் ஆர்வம் காட்டத் தொடங்கி இருக்கிறார்கள்.

'இன்ஃப்ளூயன்சர்" (Influencer) என்பதைச் செல்வாக்குச் செலுத்துபவர் என்று சொல்லலாம்.

### சாமானியரின் சந்தைப்படுத்தல்

எந்த ஒரு வியாபாரமாக இருந்தாலும் விளம்பரப்படுத்துவது மிகவும் அவசியம். எந்தவொரு பொருளையும், நிறுவனத்தையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பது புதுமையான விளம்பர உத்திகள்கள்தான். இந்த விளம்பர உத்திகளும் காலத்துக்கு ஏற்ப மாறி வந்திருக்கின்றன.

'இன்ஃப்ளூயன்சர்' மார்க்கெட்டிங்கைப் பொறுத்தவரை சமூக வலைத் தளங்களில் அதிக எண்ணிக்கையிலான ஃபாலோயர்ஸைக் கொண்டவர்கள் விளம்பரப்படுத்துதலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

பிரபலமான ஒருவர்தான் 'இன்ஃப்ளூயன்சர்'ராக இருக்க வேண்டுமென்பதில்லை. சாமானியரும்கூட 'இன்ஃப்ளூயன்சர்' ஆகலாம். ஆனால், உங்களுக்கான ஃபாலோயர்கள் சற்று அதிகமாக இருக்க வேண்டும். சினிமா, கல்வி, மருத்துவம், ஃபேஷன் எனக் குறிப்பிட்ட ஏதாவதொரு துறையில் தொடர்ந்து இயங்குபவராக இருப்பது அவசியம்.

விளம்பரங்களை இன்ஸ்டகிராம் ரீல்ஸ்களாக, போஸ்டர்களாக துறைச் சார்ந்த தகவல்களைப் பகிர வேண்டும். இந்த அம்சங்கள் இருந்தால் 'இன்ஃப்ளூயன்சர் என்கிற அந்தஸ்தைப் பெற்றுவிடலாம். நிறுவனங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இயங்கும் இந்த இன்ஃப்ளூயன்சர்களின் முக்கியப் பணியே விளம்பரப்படுத்துவதுதான்.

### என்ன படிக்கலாம்?

பெரும்பாலான 'இன்ஃப்ளூயன்சர்'கள் முழு நேரப் பணியாக மார்க்கெட்டிங் பணியில் இயங்குவதில்லை. பகுதிநேர வேலையாக மட்டும் இதை அணுகும் இவர்கள், சமூக வலைத்தளத்தின் பயன்பாட்டைச் சுயமாகக் கற்றுக்கொள்கிறார்கள். அதன் மூலம் வருமானம் ஈட்டுகிறார்கள்.

'இன்ஃப்ளூயன்சர்'களாக இருக்கக் குறிப்பிட்ட படிப்பு இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. எனினும், இத்துறையில் இயங்குபவர்களுக்கு 'டிஜிட்டல் மார்க்கெட்டிங்' சார்ந்த அறிவு இருக்க வேண்டும். எனவே, டிஜிட்டல் மார்க்கெட்டிங் சார்ந்த படிப்புகள் தேவை எனவும், அவை கூடுதல் பலனளிக்கும் எனவும் சொல்கின்றனர் இத்துறையில் புழங்குவோர்.

இந்தக் காலகட்டத்தில் முன்னணிக் கல்வி நிறுவனங்கள் இணைய வழிக் கல்வியாக டிஜிட்டல் மார்க்கெட்டிங், சமூக வலைத்தள மார்க்கெட்டிங் போன்ற தலைப்புகளில் சிறப்புச் சான்றிதழ் படிப்புகளை வழங்குகின்றன. மார்க்கெட்டிங் துறையில் இயங்க விரும்புவோர் இந்தப் படிப்புகளைத் தேர்வுசெய்து படிக்கலாம்.

படிப்பைத் தவிரத் திட்டமிடுதல், புதிய உத்திகளைப் புகுத்துதல், சிறந்த பேச்சாற்றல், தலைமைப் பண்பு, மார்க்கெட்டிங் உத்தியைக் கண்டறிதல், சமூக வலைத்தளத்தைத் திறம்படக் கையாளுதல் போன்ற கூடுதல் திறன்கள் இத்துறையில் நல்ல வாய்ப்புகளைப் பெற்றுத் தரும்.




**“அதிக மழை, அதிக வெப்பம், பொய்க்கும் மழை, வெள்ளப் பெருக்கு போன்ற அதிதீவிர கால மாறுபாடுகள் ஒரு நாட்டின் உணவு உற்பத்தியை பாதிக்கும்போது அது மற்றொரு நாட்டில் எந்தவித தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைத் தற்போதைய உலகம் உணரத் தொடங்கி யுள்ளது. இதில், உலக அரசியல் நிலைவரங்களும் மோசமானால் நிலைமை இன்னும் விபரீதமாகும் என்பதை ரஷ்யா- உக்ரைன் போர் நமக்கு உணர்த்தி உள்ளது!”**

### எதிர்காலம் எப்படி?

‘இன்ஃப்ளூயன்சர்’ மார்க்கெட்டிங் என்பது தனிநபர் சார்ந்த வேலைதான். எனவே, இன்று ‘இன்ஃப்ளூயன்சர்’கள் பெருகி வருகின்றனர். போட்டி மிகுந்த சூழலில் பணி வாய்ப்புகளைத் தக்க வைத்துக்கொள்ள உத்தரவாதம் இல்லை.

வானொலி, தொலைக்காட்சி போன்ற பாரம்பரியத் தளங்களில் விளம்பரப்படுத்தச் சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதுபோன்ற விதிமுறைகள் சமூக வலைத்தள மார்க்கெட்டிங்கில் இல்லை. ஏற்கெனவே அமுலில் உள்ள டிஜிட்டல் மார்க்கெட்டிங் சார்ந்த விதிமுறைகளும் போதுமானதாக இல்லையென டிஜிட்டல் நிபுணர்கள் சொல்கிறார்கள்.

எனவே, அதிக வதந்திகள் பரவும் தளமாகவும் இது உள்ளது. ஆக, பிரபலமாகவும் வருமானம் ஈட்டுவதற்காகவும் மட்டும் ‘இன்ஃப்ளூயன்சர்’ மார்க்கெட்டிங் துறையைத் தேர்வு செய்தால் இதில் நிலைத்து நிற்கும் வாய்ப்பு மிகக் குறைவு.

‘இன்ஃப்ளூயன்ச’ராக இயங்கும் ஒவ்வொருவரும் நிறுவனங்களைத் தேர்வு செய்வதில் கவனமுடன் செயல்பட வேண்டும். மேலும், நம்பகமான தகவல்களை மட்டும் மக்களிடம் பகிர்வது நல்லது. இத்துறையின் எதிர்காலத்துக்கு இதுவே ஆரோக்கியமான பாதையை வகுக்கும்.

### இருப்பை நிரூபிக்க..

நாம் எல்லோருக்கும் இருப்பை நிரூபிக்க வேண்டிய தேவையும் கட்டாயமும் இருக்கிறது. இருப்பை வெளிப்படுத்தும் பின்னணியில்தான் இங்கு பிரபலத்தன்மையும் கிடைக்கிறது. இது எல்லாக் காலங்களிலும் நடந்தேறியிருக்கிறது. அந்த வகையில் பிரபலத்தன்மைக்கான உச்சக்கட்ட போட்டித்தான் இன்ஃப்ளூயன்சர்கள் உலகில் நடந்து கொண்டிருக்கிறது.

சமூக ஊடகங்களைப் பொறுத்தவரை, என் பார்வையில் மூன்று வகையான உலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. முதலாவது, இன்ஃப்ளூயன்சர் உலகம். எப்படியாவது தங்களுக்குகென்று ஒரு கூட்டத்தை உருவாக்கத் திட்டமிட்டுக் கொண்டிருப்பவர்கள். உதாரணத்துக்கு, நமது அலுவலகத்தை எடுத்துக்கொள்வோம். எப்போதும் சத்தமிட்டுக் கொண்டிருப்பவர்கள் பணிசார்ந்து பெரும்பாலும் திறன் பெற்றிருக்கமாட்டார்கள். ஆனால், அவர்களது அந்தப் பாசாங்குத்தனம் எதோ விதத்தில் அவர்களுக்கு கைதட்டும் கூட்டத்தையும் உயரத்தையும் பெற்றுத் தந்திருக்கும். அதுவே, இன்ஃப்ளூயன்சர்கள் உலகத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இரண்டாவது, மந்தை உலகம். சமூக வலைதளத்தில் அதிக எண்ணிக்கையில் இயங்கிக் கொண்டிருப்பது இந்தக் கூட்டம் தான். இவர்கள்தான் இன்ஃப்ளூயன்சர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ”நாங்க உங்களுக்கு இருக்கிறோம், நீங்க தைரியமாக வீடியோ பண்ணுங்க”, ”நாங்க சப்ஸ்க்ரைப் பண்ணிடுறோம்” என்று நம்பிக்கைக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டத்திற்கு எப்போதும் ஒரு கட்டளைக் குரல் தேவைப்படுகிறது. இவர்களுக்கு ஒரு தலைவனோ, தலைவியோ தேவைப்படுகிறார்கள். அரசியல், சினிமா, கல்வி, மருத்துவம், ஆன்மிகம் என எல்லாத் துறைகளிலும் வழிநடத்தும் அந்தக் கட்டளைக் குரலை சுற்றித்தான் இவர்களது வாழ்க்கை பயணிக்கிறது.

மூன்றாவது, அவதானிப்பாளர்கள்




உலகம். இந்த அவதானிப்பாளர்கள் வட்டத்தில்தான் நானும் இருக்கிறேன். நீங்களும் இருக்கலாம். இந்த அவதானிப்பாளர்கள் தான் கூச்சலை எழுப்பிக் கொண்டிருக்கும் இன்ஃப்ளூயன்சர் உலகத்தையும், மந்தை உலகத்தையும் கூர்ந்து கவனித்து கொண்டிருக்கிறார்கள். சரி எது? தவறு எது? என்ற விவாதத்தையும் இரண்டு உலகத்திலும் எழுப்ப முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகம் முழுவதுமே சமூக வலைதளங்கள் இப்படித்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இருக்கையில் இங்கு ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் இன்ஃப்ளூயன்சர்கள் எதைப் பேசுகிறார்கள், எதை நம் கண்முன் நிறுத்துகிறார்கள் என்பதை விவாதிப்பது அவசியமாகிறது. குறிப்பாக, மந்தை உலகத்தில் இருப்பவர்களுக்கு இதை வெளிச்சமிட்டுக் காட்டுவது காலத்தின் தேவையாக இருக்கிறது. ஏனெனில், மந்தை உலகத்தின் நம்பிக்கைதான் இன்ஃப்ளூயன்சர்களின் முதலீடு.

பிரபல மனநல ஆய்வாளர் கார்ல் யாங், ”சமூகத்துக்கும் - தனிப்பட்ட உணர்வுகளுக்கும் இடையேயான சிக்கலான அமைப்புதான் தனிநபர்கள். இங்கு தனிநபர்கள், மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது தங்களின் உண்மையான உணர்வுகளை மறைப்பதற்காகவோ முகமூடிகளை அணிந்து கொள்கிறார்கள்” என்கிறார். நமது இன்ஃப்ளூயன்சர்களும் இதைத்தான் செய்கிறார்கள். முகமூடிகளை கழட்டி ஆராய்வது நம்மிடம்தான் இருக்கிறது. ஆராய்வோம்.

# இஸ்ரேல் கறவை மாடுகளுக்கான உணவூட்டலும் பண்ணைகளும்





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

இஸ்ரேல் ஒரு வறண்ட நாடு. குடி தண்ணீர் மிக மிக குறைவாகவே கிடைக்கும் வகையானது. வருடத்தில் மிகக் குறைந்த காலமே மழை கிடைக்கும். இந்த நிலை யில் கால்நடை வளர்ப்புக் குறிப்பாக புல் வளர்ப்பது சிரமம். எனினும் இஸ்ரேலியர்கள் அதற்கும் தகுந்தாற் போல புல் வளர்ப்பு, ஊறுகாய் புல் செய்தல் எனக் கால்நடை வளர்ப்பைச் சிறப்பாகச் செய்கின்றனர். அதிக உற்பத்தி தரும் ஊட்டச் சத்து மிகுந்த வறட்சியைத் தாங்கும் வகையான புற்களை நவீன ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கிப் பயன்படுத்துகின்றனர்.

நவீன இஸ்ரேல் ஒரு நாடாக உருவாக முதலே அதற்குரிய திட்டமிடல்கள் உருவாகத் தொடங்கி விட்டன. பல நாடுகளிலிருந்து அகதிகளாக வந்திறங்கிய மக்கள் அங்குள்ள வறண்ட பாலை நிலங்களில் கூட்டம் கூட்டமாக பண்ணை அமைப்பில் இயங்கத் தொடங்கினர். ஒண்றிணைந்து விவசாயம், விலங்கு வேளாண்மை போன்ற உற்பத்திச் செயன்முறைகளில் ஈடுபட்டனர். இதனை கிப்புட்ஸ் (Kibbutz) பண்ணைகள் என அழைத்தனர்.

கிடைக்கும் உற்பத்தி விளை பொருட்களைப் பகிர்ந்து கொண்டனர். இது ஒரு சோ சலிச, சியோனிச கூட்டு எண்ணக் கருவாகும். குழந்தைகளைப் பிள்ளை மடுவங்களில் விட்டு விட்டே பெற்றோர் பண்ணைகளில் உழைத்தனர். பல வருட தியாகங்கள், கடும் உழைப்புகளின் அடிப்படையில் தான் நவீன இஸ்ரேல் உருவாகியது. இன்றைய வளம் மிக்க பண்ணைகள் உருவாகியுள்ளன. இன்றும் கிப்புட்ஸ் பண்ணைகள் இஸ்ரே லில் உள்ளன. மேலதிகமாக mashov எனும் தனியார் பண்ணைகளும் உள்ளன. இந்த இரண்டு வகையான பண்ணைகளும் தான் இஸ்ரேலின் பாலுற்பத்தியின் அடிப்படைகள். நவீன இஸ்ரேல் பண்ணைகள் ஆரம்பகால அடிப்படைகளைப் பெருமளவு மாற்றாது நவீனத்தைச் சூட்சுமமாகப் புகுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1975-80 களில் தென்னிலங்கை கலவரங்களில் பாதிக்கப்பட்டு வடக்குக்கு வந்த மலையகத் தமிழ் மக்களை டேவிட் ஐயா போன்ற காந்திய அமைப்பின் ஸ்தாபகர்கள் வவுனியாவில் குடியேற்றினர். மிளகாய், கத்தரி போன்ற பயிர்த் தோட்டங்கள் இந்த எண்ணக்கருவின் அடிப்படையில் செய்யப்பட்டு உற்பத்திகளை விற்பனை செய்தனர். இஸ்ரேலின் கிப்புட்ஸ் பண்ணைகளின் அடிப்படையில் தான் இந்த குடியேற்றங்களை உருவாக்கியதாக டேவிட் ஐயா சொல்லியிருப்பார். அவர் பல் நாடுகளில் நகர திட்டமிடலில் பங்குபற்றியவர். இன்றும் வவுனியாவின் தமிழர் சனத்தொகையை தீர்மானிப்பதில் அன்றைய கிப்புட்ஸ் பாணியிலான குடியேற்றங்களே காரணம்.

80 களில் டேவிட் ஐயா போன்றோர் கைது செய்யப்பட்டதோடு கைவிடப்பட்ட காந்தீயம் நடவடிக்கைகள் இன்றுவரை தொடர்ந் திருந்தால் நிலைமையே வேறு. வவு னியாவின் தலைசிறந்த கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் தோட்டக்காரர்கள்



அன்றைய காந்தீயப் பண்ணையாளர்க ளின் வழித் தோன்றல்களே.

அடுத்த விடயமாக இஸ்ரேலின் கால் நடை உணவூட்டலைப் பார்ப்போம்.

நான் முன்பு கூறியது போல் இஸ்ரேல் ஒரு வறண்ட நாடு. குடி தண்ணீர் மிக மிக குறைவாகவே கிடைக்கும்வகையானது. வருடத்தில் மிகக் குறைந்த காலமே மழை கிடைக்கும். இந்த நிலையில் கால்நடை வளர்ப்பு குறிப்பாகப் புல் வளர்ப்பது சிரமம். எனினும் இஸ்ரேலியர்கள் அதற்கும் தகுந்தாற் போல புல் வளர்ப்பு , ஊறுகாய் புல் செய்தல் என கால்நடை வளர்ப்பைச் சிறப்பாகச் செய்கின்றனர். அதிக உற்பத்தி தரும் ஊட்டச்சத்து மிகுந்த வறட்சியைத் தாங்கும் வகையான புற்களை நவீன






ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கி பயன்படுத்துகின்றனர்.

கோதுமை, பருத்தி போன்ற பயிர் மீதிகளை சைலேஜ் செய்கின்றனர். முக் கியமான பல தீவன முலப்பொருட்களை இறக்குமதி செய்கின்றனர். நவீன உணவுக் கலவை முறையான TMR (Total Mxed Ration) ஐப் பயன்படுத்தியே பெரும்பாலும் உணவூட்டம் இடம் பெறுகிறது.

அதாவது மாடுகளின் இனம், நிறை, வயது,உற்பத்தியின் அடிப்படையில் தேவை கணக்கிடப்பட்டுப் பசுந்தீவனங்கள், செறிவு ணவு கலக்கப்பட்டு கால்நடைகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தக் கலவை பண்ணை மட்டங்களில் நிகழ்வதில்லை. ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள பிராந்திய கலவை நிலையங்கள் மூலம் கலக்கப்பட்டு அந்த கலவையை நிலையம் சார்ந்த பிராந்திய பண்ணைகளுக்கு தினமும் இரண்டு தடவை வழங்குகிறார்கள்.

இஸ்ரேலில் இந்த மாதிரி 25 வரையான கலவை நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு நிலையமும் 60 வரையான பண்ணைக ளைக் கவனிக்கின்றன. கால்நடை வளர்ப் பில் 60-70% செலவு உணவூட்டலில் தான் ஏற்படுகிறது. இப்படியான உண வூட்டலை அரசு/அரசுடனான அமைப்புகள் ஏற்பது பண்ணையாளருக்கு இலாபகரம் என்பதோடு தொடர்ச்சியான உற்பத்தியை யும் பெற முடிகிறது.

மூன்று வாரங்களாக இஸ்ரேல் நாட்டின் கால்நடை வளர்ப்பின் முன்னேற்றகரமான விடயங்களைப் பற்றி எழுதி வந்திருந்தேன். இந்த விடயங்கள் சிலவற்றை இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தி னால் பாலுற்பத்தித் துறையில் முன்னேற் றமடையலாம்.







வேதநாயகம்
தபேந்திரன்



# குப்பையை எருவாகப் பார். கூழாங்கல்லைத் தெருவாகப் பார்.

வேலிகளை அழித்து மதில்கள் யுகத்திற்குள் வந்து விட்டோம். அதன் விளைவு வேலிகளால் வந்த குளிர்மையும் இல்லை. கொல்லைப்புற மரக்கறிகளும் இல்லை. இலை குழை சருகுப் பசளைகளும் இல்லை.

இருக்கின்ற மரங்களின் சருகுகளை அடி வளவில் சேகரித்து விவசாயத்திற்குப் பசளையாக்கலாம்

கவிஞர் காசி ஆனந்தன் 1992 இல் வெளியிட்ட தத்துவக் கதை சொல்லும் சிறு நூலில் வாசித்த ஒன்று.

யார் என்ன சொன்னாலும் விவசாயத் துடன் பின்னிப் பிணைந்த பெரும்பாலான மக்கள் சமூகம் கொண்ட ஒரு நாடாகவே எமது நாடு உள்ளது.

சமதரைகளைக் கொண்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மரங்களிலிருந்து பழுத்து விழும் இலைகளைச் சருகுகளை ஒரு செல்வமாகப் பார்த்த பெரும் சமூகம் ஒன்று எம் கண் முன்னே வாழ்ந்தது.

இலை,குழை.சருகுகளைக் குப்பை எனும் சொல் கொண்டு அழைப்பார்கள். அதனால் குப்பைகளை எருவாகப் பார்த்தார்கள். அந்த எருவை வயல், தோட் டம்,வீட்டுப் பயிர்களுக்கு மண்ணுடன் கலந்து பசளையாகப் பாவித்தார்கள்.

கூழாங்கல்லைத் தெருவாகப் பார்த்தார் கள். சின்னச் சின்னக் குறுணிக்கற்களை வீணாக்காமல் வீதி அமைக்கப் பயன் படுத்தினார்கள்.

உர இறக்குமதி செய்யப் பணம் இல்லை. விவசாய உற்பத்திகள் வீழ்ச்சி அடையப் போகின்றதென ஒப்பாரி படிக்கின்றோம். ஆனால் இயற்கைப் பசளை தயாரிக்கக் கூடியளவு பெருமளவு வளம் எம்மிடம் உண்டு.

அரகலயவால் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச உர இறக்குமதிகளை இரவோடு இரவாக நிறுத்தினார். உள்நாட்டு இயற்கைப் பசளை உற்பத்தி மூலமாக விவசாயம் செய்யுங்கள் என்றார்.

அவர் ஒரு நான்கு வருட கால எல் லைக்குள் இயற்கைப் பசளைக்கு நாட்டை முற்றாக மாற்றும் வேலைத் திட்டத்தை மேற்கொண்டு இருந்தால் நாடு முன்னேறி யிருக்கும்.

உரப்பாவனையால் நிலத்தடி நீர் மாச டைந்து ஏற்படும் நோய்களின் எண்ணிக் கையையும் பெருமளவு குறைக்க வழி ஏற்பட்டிருக்கும்.

இன்றும் நிறைய மரங்களிலிருந்து இலை குழை, சருகுகள் சேர்ந்து குப்பைக ளாகின்றன. ஆனால் சிறிதளவு குப்பைகளே விவசாய நடவடிக்கைக்கு எருவாகப் போகின்றன. மிகுதி யாவும் எரிக்கப்படு கின்றன. அல்லது உபயோகமற்ற வகை யில் கழிவாக அகற்றப்படுகின்றன.

குப்பைகளை மண்ணுடன் கலந்து விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்தும் போது மண்வளம் பாதுகாக்கப்படுகின்றது. அதாவது மண் மாசடையாமல் மண்ணின் வளம் கூட்டப்படுகிறது. மண் வளத்தைப் பாதுகாக்கும் மண்புழு போன்றவை உயிர் வாழும். எமது சூழல்சமநிலை பாதுகாக் கப்படும்.

உரப்பாவனை மூலமாகப் பயிர்கள் சிறிது நாள்களே சிறந்த அறுவடையைத் தரும். ஆனால் குப்பைகளை இயற்கைப் பசளையாகப் பாவிப்பதன் மூலமாகப் பயிர்கள் நீண்ட நாள்களுக்கு நின்று மிகச் சிறந்த அறுவடையைத் தரும். அறுவடை யாகக் கிடைக்கும் உணவுப் பொருள்கள் தரமாகவும் சுவையாகவும் உடலுக்கு ஆரோக்கியம் தருவதாகவும் அமையும்.

குறிப்பாகக் காய்க்கும் தென்னை மரங்க ளின் அடியிலிருந்து எட்டடி தள்ளி பொச்சு மேற்புறம் பார்க்கக் கூடியதாகத் தாழ்ப்ப தன் மூலமாக வருடக் கணக்கில் சிறந்த உற்பத்திகளைப் பெறலாம்.

வேலிகளை அழித்து மதில்கள் யுகத்திற்குள் வந்து விட்டோம். அதன் விளைவு வேலிகளால் வந்த குளிர்மையும் இல்லை. கொல்லைப்புற மரக்கறிகளும் இல்லை. இலை குழை சருகுப்பசளைகளும் இல்லை.

இருக்கின்ற மரங்களின் சருகுகளை அடி வளவில் சேகரித்து விவசாயத்திற்குப் பசளையாக்கலாம். இவ்வாறு குப்பைகளைச் சேகரிக்கும் போது பொலித்தீன், பிளாஸ்ரிக், ஆணி, தகரம், அஸ்பெஸ்ரஸ் போன்றவை இல்லாமல் தூய்மையானதாகச் சேகரிக்க வேண்டும்.

இதன் மூலமாக மண் மாசடைதலைத் தவிர்க்கலாம். விவசாய விளைநிலமும் சிறந்த அறுவடையைத் தரும்.

பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை போன்ற அமைப்புகள் கழிவகற்றும் போது தூய்மை பேணுவதற்காக பலவித அறிவுறுத்தல்களை விடுக்கின்றன. அது போல கழிவுகளை இடுவதற்கு 03 வகை யான கொள்கலன்களைப் பொது இடங்களில் வைத்துள்ளனர். ஆனால் பொதுமக்களில் பெரும்பாலானோர் இதற்குரிய சிறந்த ஒத்துழைப்பை வழங்கவில்லை.

பொதுமக்கள் இயற்கைப் பசளை தயாரிப்பதற்கு மிகச் சிறந்த ஒத்துழைப்பை வழங்கும் பொறிமுறையை நடைமுறைக் குச் சாத்தியமாக்குவதன் மூலமாக உர இறக்குமதிகளை மிகப் பெருமளவுக்குக் குறைத்துத் தாயகப் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தலாம்.

# TRADE BASED MONEY LAUNDERING (TBML)




(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தன்மை மற்றும் கண்டறியும் தன்மையை மேம்படுத்துகின்றது. மேலும் குற்றவாளிகள் கணினியை அனுமதியற்ற முறையில் ஊடறுப்பதனை மற்றும் கையாள்வதனைக் கடினமாக்குகின்றது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடியை (TBML) முறியடிக்க இலங்கை அரசாங்கம் பல புதிய சட்டங்களையும் ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தும் புதிய சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் எவ்வாறு அமைகின்றது என்பதனைப் பார்ப்போம்.

- பணமோசடித்தடுப்புச்சட்டம் Prevention of Money Laundering Act (PMLA), 2022இல் PMLA பற்றிய குறிப்பிட்ட விதிகளைச் சேர்க்கும் விதமாகப் புதிதாக இந்தச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைப் புகாரளிக்க நிதி நிறுவனங்கள் மற்றும் பிற வணிகங்களுக்கு PMLA தேவைப்படுகின்றது. மேலும் இது TBML வழக்குகளை விசாரிக்கவும் வழக்குத் தொடரவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கின்றது.
- இலங்கைச் சுங்கச் சட்டம் TBML ஐக் கண்டறிந்து விசாரிக்கும் சுங்க அதிகாரிகளின் திறனை வலுப்படுத்துவதற்காக 2022இல் திருத்தப்பட்டது. தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் TBML உடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் பொருட்களைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தைச் சுங்க அதிகாரிகளுக்கு வழங்குகின்றன. மேலும் வர்த்தகர்கள் தங்கள் பரிவர்த்தனைகள் பற்றிய கூடுதல் தகவல்களை வழங்க வேண்டும் என்கின்ற அதிகப்படியான சட்ட மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இலங்கை-அமெரிக்கா பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தம் Sri Lanka-United States Mutual Legal Assistance Treaty (MLAT). இது 2022 இல் கையொப்பமிடப் பட்டது. TBML வழக்குகளை விசாரிப்பதற்கும் விசாரணை செய்வதற்கும் அமெரிக்க அதிகாரிகளிடம் இருந்து உதவி கோரவும் உதவியைப் பெறவும் இலங்கை அதிகாரிகளை MLAT அனுமதியளிக்கின்றது.

இந்தப் புதிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் TBMLக்கு எதிரான இலங்கையின் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சிப்படியாகும். நாட்டின் AML/ CFT கட்டமைப்பை வலுப்படுத்தவும் வர்த்தகப் பரிவர்த்தனைகள் மூலம் பணப் பரிமாற்றம்செய்வதைக் குற்றவாளிகளுக்கு மேலும் கடினமாக்கவும் இவை உதவும்.

இந்தப் புதிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு மேலதிகமாக இலங்கை அரசாங்கம் TBMLஐ எதிர்த்துப் போராடுவதற்குப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இவற்றில் பின்வருவன அடங்கும்:

- வணிகங்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடையே TBML பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- சுங்க அதிகாரிகள் மற்றும் பிற சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு TBML கண்டறிதல் மற்றும் விசாரணை குறித்துப் பயிற்சி அளித்தல்.
- TBML இல் தகவல் மற்றும் உளவுத் துறையைப் பகிர்ந்து கொள்ள சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுதல்.

"IGNORANCE OF LAW IS NO EXCUSE" என்கின்றது சட்டம். ஆகவே, நடைமுறையில் உள்ள சட்டங்களினைத் தெரிந்து, முழுமையாக அறிந்திருந்து அதன்படி செயற்படுதல் ஒவ்வொரு நாட்டு மக்களுடைய கடமையாகும். இலங்கை அரசாங்கம் TBML மற்றும் பிற வகையான நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராட உறுதிபூண்டுள்ளது. இலங்கையில் புதிய சட்டங்கள், உடன்படிக்கைகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கம் மேற்கொண்டு வரும் ஏனைய நடவடிக்கைகள், குற்றவாளிகளுக்குக் கடினமான சூழலை உருவாக்குகின்றது.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# எங்கட ஆச்சி


- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -



முந்திப் பின்னேரங்களில பாத்தம் எண்டால் பெண்டுகள் ஆற்றையும் படலைக்குள்ள வட்டமா புழுதியில குந்தி இருந்து கதைப்பினம். உந்தப்பின்னேர ஒன்றுகூடல் எண்டது என்ன பிரச்சினை இருந்தாலும் ஒவ்வொரு நாளும் தவறாம நடக்கும். உந்தப் பெண்டுகளின்ரை கூட்டத்தில அண்டை அண்டைக்கு அவையின்ரை வீடுகளில என்ன சமைச்சவை எண்டதில இருந்து சீலை டிசைன் நகை டிசைன் வயல் வளவு வேலையள் எண்டு பலவும் கதைப்பினம். அதோட மூக்குச் சிந்தல்களும் முந்தானைத் துடைப்புகளும் நடக்கும். அதை விட ஆற்றையும் விடுப்புகளைக் கதைக்கிறதில அவைக்கு ஒரு சந்தோசம். அதிலும் தங்கட தங்கட வீடுகளில நடக்கிறதை அப்பிடியே மறந்து போட்டு இல்லாட்டில் விட்டுப்போட்டு மற்ற ஆற்றையும் வீடுகளில ஆற்றை பெடியோட ஆற்றை பெட்டைக்கு காதல். ஆர் ஆரோட தொடுசலா இருக்கினம் .அவை அவை தங்கட பெட்டையளுக்கு என்ன சீதனம் குடுத்தவை பெடியளுக்கு என்ன முதுசம் குடுத்தவை ஆராரோடை ஆரார் என்ன சண்டை எண்டெல்லாம் விலாவாரியா அலசி ஆராய்வினம். உந்தக்கிசு கிசு விசயங்கள் எண்டால் ஆற்றையும் கதையை எங்களுக்கு என்னத்துக்கு எண்டு சொல்லி சொல்லியே கதைப்பினம். அப்பிடிக் கதைக்கேக்கை அங்கினேக்கை ஒழுங்கை வழியை நிண்டு ஆரும் கேட்டாலும் கரைச்சல் எண்டுகொண்டே கொஞ்சம் குரலை அமத்தி வைச்சுக் காதுக்கை வாயை ஒட்டி வைச்சு கொண்டு கதைப்பினம்.

அடுத்தவையை ஏத்திவைச்சுக் கதைக்கிறதை விட தூத்திக்கதைக்கிறதுதான் கூடவாயிருக்கும். ஆற்றையும் பெயரைச் சொல்லி அவையின்ரை ஏழு பரம்பரையையும் இழுத்து வைச்சு இப்ப அவளுக்கு உந்த வெளிநாட்டு காசு வந்து கண்கடை ஒண்டும் தெரியுதில்லை .இருந்த இருப்புத் தெரியாதாக்கும் அவளும் அவளின்ரை கெப்பரும் எண்டு நாடியைத் தோளிலை இடிச்சு நக்கலாயும் நளினமாயும் கதைப்பினம். இப்பிடியே அடுத்தவையை ஆட்டுக்கல்லிலை அம்மியிலை உரலிலை வைச்சு ஆட்டுறமாதிரி அரைக்கிறமாதிரி இடிக்கிற மாதிரி இடிச்சுத்துவைச்சு ஒரு வழி பண்ணிப்போடுவினம். உப்பிடியான உந்தக் கூட்டங்களிலை கொஞ்சம் வயசுபோனவை இருந்தினம் எண்டால் தூசணங்களுக்கும் குறைவிருக்காது.

ஆனா உந்த ஒன்றுகூடலிலை அடுத்தவையைப்பற்றிக் கதைச்சாலும் கூடத் தங்கட பிரச்சினையளையும் ஆளாளுக்கு சொல்லி ஆறுதல் தேடுறதும் நடக்கும். கவுன்சிலிங் ஆலோசனை சொல்லுறதெல்லாம் நடக்கும். உண்மையில உந்த ஒன்றுகூடலில அவையின்ரை பிரச்சினைகளை மனம்விட்டு கதைக்கிறதால அவைக்கு உது ஒரு பெரிய ஆறுதல் எண்டது பெரிய உண்மை. வயசு போனவை எல்லாம் தாங்கள் தங்களுக்கு வந்த பிரச்சினைகளை எப்பிடிச் சமாளிச்சம் எண்டு தங்களிலும் பாக்க வயசு குறைஞ்சவைக்கு தங்கட அனுபவங்களைச் சொல்லுவினம். குறிப்பா கொஞ்சம் குழப்படியான ஆம்பிளையளை எப்பிடி எல்லாம் கையாளவேணும் மாமி மருமோள் பிரச்சினைகளை எப்பிடி கையாளவேணும் எண்டு ஐடியா எல்லாம் குடுப்பினம். உப்பிடி இலவச ஆலோசனை குடுத்தே எத்தினையோ வீடுகளில வரக்கூடிய சீரியசான பிரச்சினை எல்லாம் சிம்பிளாத் தீர்த்து வைச்சிருக்கினம் எண்டுதான் சொல்ல வேணும். ஆனா சில இடங்களில சும்மா புகைஞ்ச பிரச்சினைளை கொஞ்சம் விசிறி விட்டுக் கூத்துப்பாத்ததும் நடந்திருக்கெண்டு சொல்லத்தான் வேணும்.

எங்கட ஆச்சி உப்பிடிக்கூடி இருந்து முசுப்பாத்தியும் பகிடியுமா கதைக்கிறதும் கெக்கட்டம் போட்டு சிரிக்கிறதுமா இருக்கிறது மனசுக்கு எவ்வளவோ ஆறுதல் எண்டு சொல்லுவா. இப்ப உப்பிடி மனம் விட்டு கதைக்க ஆளில்லாமல் தங்கட பிரச்சினைகளை சொல்லி அழுது ஆறுதல் பெற ஆளில்லாமல் பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல் எத்தினையோ பேர் தங்களுக்கையே தாங்கள் பேசிக்கதைச்சு இல்லாட்டில் சுத்தி இருக்கிற சுவர்களோடயே கதைச்சு மன அழுத்தம் கூடி வருத்தக்காறராப் போச்சினம் எண்டு தான் சொல்ல வேணும். இன்னுஞ் சிலருக்கு ஆக்களின்ரை வேலையை போனும் ரீவியும்தான் செய்யுது எண்டாலும் ஆக்களை மாதிரி அதுகளால ஆருக்கும் ஆறுதல் சொல்லேலுமே.

கனக்க ஏன்போவான் இண்டைக்கு வீட்டுக்குள்ளேயே ஆளாளோட ஆள் கதைக்கிறது குறைஞ்சு போச்சுது. ஆளுக்கொரு போன் வைச்சுக்கொண்டு மூலைக்கு ஒருத்தராக் குந்தி இருக்கினம். ஏன் கனக்கப்போவான் புரியன் பெண்டிலே ஆளுக்கொரு பக்கம் பாத்துப் படுத்துக்கொண்டு போனில அப்டேற்ஸ் போட்டுக்கொண்டு இருக்கினம்.எங்கட ஆச்சி வீட்டில இருக்கிற ஆக்கள் எப்பவும் கலகலவெண்டு சிரிச்சுக்கதைச்சுக் கொண்டு இருக்க வேணும். அப்பதான் குடும்பத்தில அமைதி இருக்கும் சந்தோசம் இருக்கும் எண்டு சொல்லுவா. உந்தக் கலகலப்புகளுக்கு முந்திப்பஞ்சம் இல்லாம இருந்ததால்தான் குடும்பப் பிரச்சினை எண்டு விதானை பொலிசு கோடு கச்சேரி எண்டு போய் ஆக்கள் குடும்ப மானங்களை வித்தது கிடையாது. இல்லாட்டில் ஏதும் பிரச்சினைகளுக்கு உந்த ஒன்றுகூடல்களிலேயே தீர்வும் ஆலோசனைகளும் கிடைக்கும். முந்திச் சின்னச்சின்ன பிரச்சினைக்கும் டிவோஸ் வேணும் எண்டு திரிஞ்சது கிடையாது.

ஆனா இப்ப உப்பிடியான கலகலப்புகளை நாகரீகப் போர்வையில கனவீடுகளிலை துலைச்சுப்போட்டினம் எண்டுதான் சொல்லவேணும். காசைக்குடுத்து வில்லங்கங்களை வாங்கியந்து வீடுகளிலை வைச்சிருக்கினம். இண்டைக்கு கன வீடுகள் தீர்வு இல்லாத பிரச்சினையளால நிறைஞ்சுபோய்க்கிடக்கு. உதுகளைத் தீர்க்கிறதாய் இருந்தால் உந்த எங்கட படலையடிக்கூட்டங்களை பழைய படி கூட்ட வேணும்.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2023இல் வெளியிடப்பெற்றது.